**செ.வெ. எண்: 538** **நாள்: 12.09.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.9.2012 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகரில் 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் பகுப்பாய்வு மாதிரிகள் அனைத்தும் தற்போது சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்துக்கே அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வாறு சென்னையிலுள்ள சுற்றுச்சூழல் ஆய்வகத்திற்கு மாதிரிகள் அனுப்பப்படுவது மிகவும் சிரமமாக உள்ளது என்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகரில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக சுமார் 58 லட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஆய்வகம் அமைக்க உத்தரவிட்டிருந்தார்கள். அதன்படி அமைக்கப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆய்வகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.9.2012 அன்று காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.9.2012 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகங்களுக்கு 1 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 86 மிதக்கும் நுண்துகள் (PM 10) கருவிகள் மற்றும் 11 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 5 மிதக்கும் நுண்துகள் (PM 2.5) கருவிகள் ஆகியவற்றை மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு வழங்கினார்கள்.

மேலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் வாயு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தன்மையை உடனுக்குடன் இணையதளம் மூலம் அறியும் பொருட்டும், கண்காணிப்புப் பணிகள் அனைத்தையும் கணிணி மூலமாக மேற்கொள்ளவும் இந்தியாவிலேயே முதல் முறையாக 3 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் இணையதள வசதியுடன் கூடிய 34 கையடக்க கணினிகளை (Tablet Computer) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மாசற்ற தமிழகத்தை உருவாக்கிட, தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023–ன் ஓர் அங்கமாக தொழிற்சாலைகளின் மாசு கட்டுப்பாட்டு செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கிய 12 தொழிற்சாலைகளுக்கு முதல் முறையாக பசுமை விருதுகள் மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 12.9.2012